இலங்கையில் எவ்வாறு உதவியை பெறுவது?

இலங்கையில் நவீன அடிமைத்தனம், கட்டாய உழைப்பு மற்றும் மனித கடத்தல் வியாபாரம் தொடர்பில் எவ்வாறு அறிக்கையிடுவது என்பதை அறிந்துகொள்வதுடன் பாதுகாப்பான புலம்பெயர்வு குறித்த தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.

உலகளாவிய ரீதியில் 28 மில்லியன் மக்கள் கட்டாய உழைப்பு எனும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.அதிலும் குறிப்பாக புலம்பெயர் தொழிலாளர்கள்  புலம்பெயராதவர்களை விட மும்மடங்கு அதிகமாக கட்டாய உழைப்புக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கடந்த 2022 ஆம் ஆண்டில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்கள் வெளிநாடுகளில் பணிபுரிந்தனர். இவர்களில் அநேகமானவர்கள்  தாம் நினைத்ததற்கு மாறாக வேறு  தொழிலில் ஈடுபடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

ஒரு புறம் வாக்குறுதி அளிக்கப்பட்ட சம்பளம் கிடைப்பதில்லை,

மறுபுறம் வெளிநாடு செல்ல பெற்ற கடனை மீளச்செலுத்த முடியாமை, அச்சுறுத்தல் அல்லது தொழில் வழங்குநரை மாற்ற முடியாத விசா நடைமுறை  உள்ளிட்ட விடயங்களால் இந்த சூழ்நிலையை விட்டு விலக முடியாமல் இருக்கலாம்.

அனைத்து தொழிலாளர்களும் சமமாகவும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு என்பதை நினைவில் வைத்திருப்பது மிக முக்கியமாகும்.

உங்கள் உரிமை தொடர்பில் அறிந்து கொள்வதுடன் முறைப்பாட்டை மேற்கொள்ளும் முறை தொடர்பில் அறியவும் உங்கள் நேரத்தை ஒதுக்கிக் கொள்வதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

இலங்கையில் நவீன அடிமைத்தனத்துக்கு எதிராக யாரிடம் முறைப்பாடு செய்ய முடியும்?

நீங்கள் முறைப்பாடு செய்ய விரும்பினால், 076 844 7700 எனும் ஆட்கடத்தலுக்கு எதிரான தேசிய செயலணியின் துரித தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

உங்கள் சூழ்நிலைக்கான சரியான உதவியை நாட வேண்டுமாயின் இலங்கையின் சர்வதேச புலம்பெயர்ந்தோருக்கான நிறுவனத்தை 0766 588 688 எனும் துரித தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்கலாம்.

பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பிலான தகவல்களை நீங்கள் எங்கிருந்து பெற்றுக்கொள்ள முடியும்?

பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பிலான மேலும் பல தகவல்களை அறிந்து கொள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் உங்களுக்கு உதவும்.

வெளிநாடு செல்வதற்கு முன்னர் உங்கள் உரிமைகளை சரியாக தெரிந்து கொள்ளுங்கள்.

புலம்பெயர்வு உங்கள் வாழ்வை மாற்றும் அனுபவமாக இருக்கலாம்.

எனினும் இது உங்களது வாழ்வை சிறப்பான முறையில் மாற்றுவதாக அமைய வேண்டியதே மிக முக்கியமாகும்